# தமிழிணைய அகராதி
# பயனர்கையேடு

2016 ஆம் ஆண்டு வெளி வந்த வாணி இணையத் தொகுப்பகராதி அடிப்படையில் தமிழ் இணையக் கல்விக்கழகத்துடன் சேர்ந்து மேசைப்பதிப்பில் தமிழிணைய அகராதி உருவாக்கப்பட்டது.

**நிறுவுதல்**

தமிழிணைய கல்விக் கழகத்தின் இணையத்தளம் சென்று மென்பொருளைத் தரவிறக்கவும்.
மென்பொருளின் கோப்பினை unzip செய்து விரும்பிய இடத்தில் சேமித்துக்கொள்ளலாம்
செயலியின் கோப்புறையைத் திறந்து dictionary.exe என்ற கோப்பை எடுக்கவும். அவ்வளவே.

**அகராதிகள் மூலம்**

இதில் இணைக்கப்பட்டுள்ள அகராதிகள் அனைத்தும் பொது உரிமையில் கிடைக்கக் கூடிய அகராதிகள் ஆகும். இதன்இணையமுகவரிகள் கீழே உள்ளன
http://www.tamilvu.org/library/dicIndex.htm தமிழ் - தமிழ் அகரமுதலி
http://www.tamilvu.org/library/dicIndex.htm தமிழ் லெக்சிகன் - Tamil Lexicon
http://dsalsrv02.uchicago.edu/dictionaries/fabricius/ பாப்ரிசிஸ் அகராதி - J.P. Fabricius Dictionary
http://dsalsrv02.uchicago.edu/dictionaries/kadirvelu/ கதிர்வேலு அகராதி -Na Kadirvelu Pillai Dictionary
http://dsalsrv02.uchicago.edu/dictionaries/mcalpin/ மெக்ஆல்பின் அகராதி - David W. McAlpin
http://dsalsrv02.uchicago.edu/dictionaries/winslow/ வின்சுலோ Miron Winslow
http://dsalsrv02.uchicago.edu/dictionaries/tamil-lex/ சென்னைப் பல்கலைக்கழகம் (DSAL)

**அமைப்பு**

திறக்கப்பட செயலி கீழே உள்ளவாறு காட்சி தரும். தேடல் பெட்டியில் வேண்டிய சொல்லை இட்டுத்தேடலாம்.




தட்டச்சு செய்ய வேண்டிய முறைகளை அமைப்புப் பகுதி வழியாகத் தேர்வு செய்து கொள்ளலாம். இயல்பில் ஒலிபெயர்ப்பு முறையில் இருக்கும். அதனால் நேரடியாக ஒலிப்பெயர்ப்பில் தமிழில் தட்டச்சு செய்யலாம். தமிழ்99 தட்டச்சு முறையைத் தேர்வு செய்தால் தமிழ்99 முறையில் தட்டச்சு செய்யலாம்.




தமிழ் ஆங்கிலம் கலந்து தட்டச்சு செய்ய விரும்பினாலோ, சொந்த விசைப்பலகை பயன்படுத்த விரும்பினாலோ தட்டச்சு தேர்வை நூக்கிவிடவேண்டும். இதனால் விரும்பிய முறையில் அடித்துக் கொள்ளமுடியும்.




எழுத்தின் அளவை அதிகரிக்க பெருக்கு பொத்தானைச் சொடுக்க வேண்டும். குறைக்க சுருக்கு பொத்தானைச் சொடுக்க வேண்டும்.




**<u>பயன்படுத்துதல்</u>**

தேவைப்படும் சொல்லை நேரடியாகத் தட்டச்சு செய்யும் போதே நெருங்கிய சொல்லைக் காட்டும். அதற்கேற்ப தேர்வு செய்யலாம்.




பின்னர் தேடல்பொத்தானை அழுத்தினால் அச்சொல்லின் விளக்கங்கள் விரிவாகப் பட்டியலிடப்படும். முன்னர் குறிப்பிட்ட அகராதிகளில் தேடி எடுத்துக் காட்டும். அகராதியில் சொல் இல்லாவிட்டதால் சொல் இல்லை என்று அறிவிக்கும்




உருபு ஏற்ற சொல்லாக இட்டாலும் அதைப் புரிந்துகொண்டு வேர்ச்சொல்லைக் காட்டும்.




மேலும் மூல அகராதியில் இதனைப் பார்க்க அந்த அகராதியின் பெயரைச் சொடுக்கினால் அந்த அகராதியின் பக்கத்திற்கே செல்லமுடியும்.

**அடிப்படை ஆய்வுமுறை**

- பிற அகராதி போல வெறும் சொல்லை மட்டும் கொண்டு விளக்கங்களை வழங்குவதில்லை. தொல்காப்பிய மற்றும் நன்னூல் விதிகளின் படி வேற்றுமை உருபுகளை உணர்ந்து வேர்ச்சொல்லை எடுத்துப் பின்னரே அகராதியுடன் தேடப்படுகிறது.
- அகராதிகள் அனைத்தும் HTML வடிவில் சேமிக்கப்பட்டுள்ளதால் வெளியூட்டை மற்ற வேண்டியதில்லை
- மொத்தம் இரண்டு லட்சம் வேர்ச்சொற்கள் கொண்டும் சுமார் 2 கோடி தமிழ்ச்சொற்களை இதுபுரிந்து கொள்ளும் திறன் கொண்டுள்ளது
- Boyer-Moore ஏரண நுட்பத்தில் சொல்லை ஒப்பிட்டு விரைவாகக் கணிக்கிறது.

http://www.tamilvu.org/library/lexicon/html/srchlxpg.htm
சென்னைப் பல்கலைக்கழகம் (tamilvu.org). 175050 சொற்கள்

http://dsalsrv02.uchicago.edu/dictionaries/tamil-lex/
சென்னைப் பல்கலைக்கழகம் 118440 சொற்கள்

http://www.tamilvu.org/library/ldttam/html/ldttamin.htm
தமிழ் தமிழ் அகராதி 64044 சொற்கள்

http://dsalsrv02.uchicago.edu/dictionaries/fabricius/
பாப்ரிசிஸ் 19039 சொற்கள்

http://dsalsrv02.uchicago.edu/dictionaries/kadirvelu/
கதிர்வேலு. 32084 சொற்கள்

http://dsalsrv02.uchicago.edu/dictionaries/mcalpin/
மெக்ஆல்பின் 1018 சொற்கள்

http://dsalsrv02.uchicago.edu/dictionaries/winslow/
வின்சுலோ 59449 சொற்கள்

மேலும் இதன் நவீன மற்றும் இணையப் பதிப்பை http://vaani.neechalkaran.com/word என்ற முகவரியில் பயன்படுத்தலாம். ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களுக்கு neechalkaran@gmail.com முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.